சுட்டெண் : ..............................

## பகுதி – I

❖ பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.

01. இலங்கையிலிருந்து இந்தியாவினைப் பிரிக்கும் நீரிணை
1) மலாக்கா நீரிணை 2) ஜிப்ரோட்டர் நீரிணை
3) பாக்கு நீரிணை 4) பாஸ் தொடுகடல்

02. இலங்கையின் ஆட்புலக்கடல் எல்லையின் அளவு
1) 5 கடல்மைல் 2) 10 கடல்மைல் 3) 12 கடல்மைல் 4) 24 கடல்மைல்

03. மத்திய மலைநாட்டுப் பிரதேசங்களில் அதிகம் நிகழும் இயற்கை அனர்த்தம்
1) வெள்ளப்பெருக்கு 2) நிலச்சரிவு
3) புவிநடுக்கம் 4) எரிமலை வெடித்தல்

04. தென்னாசியாவில் எழுத்தறிவு கூடிய நாடு
1) இந்தியா 2) இலங்கை 3) மாலைதீவு 4) பாகிஸ்தான்

05. இலங்கையில் மார்ச், ஏப்ரல் மாதங்களில் கிடைக்கும் மழை
1) வடகீழ் பருவக்காற்று மழை 2) சூறாவளி மழை
3) மேற்காவுகை மழை 4) தென்மேல் பருவகாற்று மழை

06. இலங்கையின் கரையோரங்களில் காணப்படும் இயற்கைத் தாவரம்
1) வில்லு 2) கண்டல் 3) தலாவ 4) பத்தனா

07. மகாவலி அபிவிருத்தி பிரதேசத்தில் பழங்குடி மக்கள் வாழும் இடம்
1) தெரணிகல 2) அம்பாறை 3) மட்டக்களப்பு 4) கதிர்காமம்

08. இலங்கையில் அதிகளவு வெள்ளப்பெருக்கினை ஏற்படுத்தும் ஆறு
1) மல்வத்துஓயா 2) வளவகங்கை 3) களனிகங்கை 4) கிரிந்திஓயா

09. யாழ்குடா நாட்டில் காணப்படும் பறவைகள் சரணாலயம்
1) சுண்டிக்குளம் 2) மாதகல் 3) கீரிமலை 4) காக்கைதீவு



kalvi.lk

10. இலங்கையின் வர்த்தக நகரம்
1) கண்டி 2) கொழும்பு 3) இசுருபாய 4) ராஜகிரிய

11. இலங்கையின் வடமேற்கே அமைந்த வரண்ட காலநிலை வலயத்தில் அடங்கும் மாவட்டம்
1) கிளிநொச்சி 2) மன்னார் 3) யாழ்ப்பாணம் 4) வவுனியா

12. கண்ட நிலத்திணிவினுள் அமைந்த கடல்
1) கருங்கடல் 2) மத்திய தரைக்கடல்
3) கஸ்பியன்கடல் 4) செங்கடல்

13. இலங்கையில் இடிமின்னல் தாக்கம் அதிகம் இடம்பெறும் காலப்பகுதி
1) ஜனவரி – பெப்ரவரி 2) மார்ச் - ஏப்ரல்
3) மே – யூன் 4) யூலை – ஓகஸ்ட்

14. உலர்வலய நிலத்தோற்றத்தில் காணப்படும் எச்சக்குன்று
1) பொம்பரிப்பு 2) குருநாகல் 3) யாப்பகூவ 4) பெரகல

15. இலங்கை அமைந்துள்ள காலநிலை வலயம்
1) இடைவெப்ப வலயம் 2) குளிர்வலயம்
3) அயன வலயம் 4) நிலைமாறு வலயம்

16. உலகில் மிகப்பெரிய கண்டம்
1) ஐரோப்பா 2) ஆசியா 3) ஆபிரிக்கா 4) வடஅமெரிக்கா

17. இலங்கையில் உயரமான மலைத்தொடர்
1) சிவனொளிபாதமலை 2) நக்கிள்ஸ் மலைத்தொடர்
3) நமுனுகுலமலை 4) பீதுருதாலகால மலைத்தொடர்

18. இலங்கைத் தமிழரும், சிங்களவரும் கொண்டாடும் கலாசார விழா
1) வெசாக் 2) தீபாவளி
3) சித்திரைப்புத்தாண்டு 4) தைப்பொங்கல்

19. பூகோளத்தில் $23\frac{1}{2}^{\circ}$ வடக்கே அமைந்துள்ள அகலக்கோடு
1) கடகக்கோடு 2) மகரக்கோடு
3) ஆட்டிக்வட்டம் 4) அந்தாட்டிக் வட்டம்

20. 2018 இல் சுனாமியின் தாக்கத்திற்கு உட்பட்ட நாடு
1) யப்பான் 2) சீனா 3) பிலிப்பைன் 4) இந்தோனேசியா

(20x2=40புள்ளிகள்)



kalvi.lk

## பகுதி – II

❖ முதலாம் இரண்டாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக.

01.

i) மூன்றாந் தவணையில் புவியியல் பாடத்தில் மேற்கொண்ட கணிப்பீட்டுக் கருவியின் பெயர் யாது?


ii) அக்கணிப்பீட்டிற்கு பயன்படுத்திய இரு தரஉள்ளீட்டுப் பொருட்களைத் தருக.

iii) கணிப்பீட்டிற்காக நீர் தகவல் பெற்ற வழிகள் இரண்டினைத் தருக.

iv) கணிப்பீட்டினை மேற்கொண்டதால் நீர் பெற்றுக்கொண்ட இரு அனுகூலங்களைக் குறிப்பிடுக.

(3x4=12 புள்ளிகள்)

02. கீழே தரப்பட்டுள்ள உலகப்படத்தில் குறித்துக் காட்டப்பட்டுள்ள ஆங்கில எழுத்துக்கள் குறிக்கும் இடங்களை உரிய இடங்களுக்கு எதிரே அடைப்புக் குறியினுள் எழுதுக.




| | | | |
|---|---|---|---|
| 1) ஐக்கிய அமெரிக்கா | (..........) | 7) பிரித்தானியா | (..........) |
| 2) மடகஸ்கார் | (..........) | 8) பிறேசில் | (..........) |
| 3) சீனா | (..........) | 9) சுமாத்திரா | (..........) |
| 4) யப்பான் | (..........) | 10) கிறீன்லாந்து | (..........) |
| 5) இந்து சமுத்திரம் | (..........) | 11) அவுஸ்தரேலியா | (..........) |
| 6) கரிபியன் கடல் | (..........) | 11) தென்னாபிரிக்கா | (..........) |

(12x1=12 புள்ளிகள்)



kalvi.lk

03.

i) மலை நாட்டு நிலத்தோற்றத்தில் காணப்படும் மூன்று பிரதான மலைத் தொடர்களைப் பெயரிடுக.

ii) மலைநாட்டு நிலத்தோற்றத்தில் மேற்கொள்ளப்படும் மூன்று பொருளாதார நடவடிக்கைகளைக் குறிப்பிடுக.

iii) உலர் வலயத்தில் நீர்பற்றாக்குறைக்கான இரு காரணங்களைத் தருக.

iv) உலர் வலயத்தில் காணப்படும் மூன்று குளங்களைக் குறிப்பிடுக.

(3x4=12 புள்ளிகள்)

04.

i) இலங்கையில் நிகழும் இயற்கை அனர்த்தங்கள் மூன்றினைப் பெயரிடுக.

ii) இயற்கை அனர்த்தங்களால் ஏற்படும் இரு பாதிப்புக்களைத் தருக.

iii) காலநிலை மாற்றம் ஏற்படுவதற்குரிய இரு காரணங்களைக் குறிப்பிடுக.

iv) காலநிலை மாற்றத்தினால் ஏற்படும் இரு தாக்கங்களைத் தருக.

(3x4=12 புள்ளிகள்)

05.

i) அகலக்கோடு என்றால் என்ன?

ii) தென்னரைக் கோளத்தில் காணப்படும் இரு அகலக் கோடுகளைப் பெயரிடுக.

iii) வட அரைக் கோளத்திற்குரிய இரு நாடுகளைத் தருக.

iv) தென்னாசிய நாடுகள் மூன்றினைத் தருக.

(3x4=12 புள்ளிகள்)

Education கல்வி අධ්‍යාපන

06.

i) இலங்கையின் வட மேற்கே அமைந்துள்ள மூன்று தீவுகளைப் பெயரிடுக.

ii) யாழ்குடா நாட்டில் உற்பத்தி செய்யப்படும் மூன்று கைத்தொழில் பொருட்களைத் தருக.

iii) யாழ் குடா நாட்டில் மேற்கொள்ளப்படும் மூன்று கைத்தொழில்களைத் தருக.

iv) யாழ் குடா நாட்டில் உள்ள சுற்றுலா மையங்கள் மூன்று தருக.

(3x4=12புள்ளிகள்)



kalvi.lk

தரம் 01 - 10

# 3ம் தவணை

**REVISION | PAPER DISCUSSION**

## ஆரம்பம் - 01.12.2024

மீட்டல் மற்றும் வினாத்தாள் கலந்துரையாடல் வகுப்புகள்

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் இணைந்து கொள்ள முடியும்.

JOIN NOW

## புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன..

### கட்டண விபரங்கள்

**தமிழ் Medium**

| | |
|---|---|
| தரம் 01-02 | 2000/= |
| தரம் 03-05 | 2500/= |
| தரம் 06-10 | 3000/= |

**English Medium**

| | |
|---|---|
| தரம் 06-07 | 3500/= |

Education கல்வி අධ්‍යාපන

KALVI.LK

WHATSAPP

075 287 1457